ශ්‍රී ලංකා නැගෙනහිර විශ්ව විද්‍යාලය

கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை

# EASTERN UNIVERSITY, SRI LANKA



# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை - 2012

# ANNUAL REPORT

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

# வருடாந்த அறிக்கை - 2012

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தூரநோக்கு | - | 01 |
| 2. | இலட்சியம் | - | 01 |
| 3. | உபவேந்தரின் மதிப்புரை | - | 01 |
| 4. | வளங்கள் மற்றும் மாணவர் விபரம் | - | 08 |
| 5. | உள்ளூர் மாணவர்களின் விபரம் | - | 09 |
| 6. | கல்விசார் ஊழியர்களின் விபரம் | - | 10 |
| 7. | கல்விசாரா ஊழியர்களின் விபரம் | - | 11 |
| 8. | ஆராச்சிகள் கண்டுபிடிப்புக்கள், வெளியீடுகள் பற்றிய விபரம் | - | 12 |
| 9. | நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றின் விபரம் | - | 14 |
| 10. | பெற்ற விருதுகளின் விபரம் | - | 15 |
| 11. | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைகள் தொடர்பான விபரம் | - | 16 |
| 12. | மீண்டெழும் செலவீனத்தின் விபரம் | - | 16 |
| 13. | மூலதனச் செலவிவுகளின் விபரம் | - | 16 |
| 14. | செயற் திட்டங்களின் விபரம் (உள்ளூர், வெளிநாட்டு நிதி) | - | 17 |
| 15. | செயற் திட்டங்களின் செலவு விபரம் (உள்ளூர்/வெளியூர் நிதி) | - | 18 |
| 16. | நிதி நிலைமை விபரம் (செலவு) | - | 19 |
| 17. | நிதி நிலைமை விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்) | - | 19 |
| 18. | நிதி செயற்றிறன் ஆய்வு – 2012 | - | 20 |
| 19. | ஏதேனும் பிற விடயங்கள்/இவ்வறிக்கை தொடர்பான செயற் திறன் | - | 20 |
| 20. | கணக்காளர் தலைமையதிபதியின் அறிக்கை - 2012 | - | 21 |
| 21. | கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை - 2012 தொடர்பில் கிழக்குப பல்கலைக்கழக முகாமைத்துவக் குழுவின் பதிலளிப்பு | - | 32 |

1. **தூரநோக்கு:**

| |
|---|
| இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நோக்கமானது கற்பித்தல் ஆராய்ச்சி மற்றும் புலமை ஆகியவற்றில் அதி சிறந்த தரத்தை பேணுதல், நன்மை பெறக்கூடிய சகலருக்கும் கல்வி மற்றும் பயிற்சிக்கான மிகச் சிறந்த வாய்ப்புக்களை பல்கலைக்கழகத்தின் உள்ளக மற்றும் வெளியகப் பீடங்கள், வளாகங்கள் மற்றும் ஏனைய வசதிகள் ஊடாக வழங்குதல், கற்றல் மற்றும் ஆராச்சிகளின் பிரயோகங்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் சமூக நலன்கள், செழுமை மற்றும் கலாச்சாரங்களை முன்னேற்றுதல் மற்றும் இத்தகைய இலச்சியங்களை வினைத்திறனுடன் எய்துவதற்காக வளங்களை நிர்வகித்துப் பாதுகாத்தல் ஆகியனவாகும். |

2. **இலட்சியம் :**

| |
|---|
| பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் ஏற்படும் நிலைமை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் போட்டி ரீதியான நயத்துடன் உயர் கற்கைகளுக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய தலைசிறந்த தேசிய மையமாக விளங்குவதே இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தினது இலட்சியமாகும். |

**3. உபவேந்தரின் மதிப்புரை**

**அ. பல்கலைக்கழகம் பற்றிய சிறுஅறிமுகம்:**

***கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையானது*** 1981ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதி விஞ்ஞானம் மற்றும் விவசாய பீடங்களுடன் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி எனும் பெயரில் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டது. அது பின்னர் முழு அளவிலான பல்கலைக்கழகமாக 1996ஆம் ஆண்டு மேலதிக பீடங்களான வர்த்தகமுகாமைத்துவ பீடம் மற்றும் கலை கலாசார பீடங்களுடன் தரமுயர்த்தப்பட்டது. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடமானது 2006ஆம் ஆண்டு ஆறு திணைக்களங்களான மனித உயிரியல் திணைக்களம், துணை சுகாதார விஞ்ஞானங்கள் திணைக்களம், நோய் உடற் தொழிற்பாட்டியியல் திணைக்களம், மருத்துவ, கல்வி மற்றும் ஆராய்ச்சி திணைக்களம், பிணியியல் விஞ்ஞான திணைக்களம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு திணைக்களம் என்பவற்றுடன் ஆரம்பிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக ***திருகோணமலை வளாகமானது*** தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய இரண்டு பீடங்களுடன் 2001ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அது சித்த வைத்திய அலகையும் கொண்டுள்ளது.

***சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகமானது*** 2005ஆம் ஆண்டு பங்குனி மாதம் 1ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது முதல், கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும் வரை சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி எனும் பெயருடன் சமூக விவகார மற்றும் இந்து கலாசார அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்தது.

**பீடங்களும் கற்கைகளும்**

- **விஞ்ஞன பீடமானது** ஐந்து திணைக்களைக் கொண்டிருப்பதுடன் உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் ஆகியவற்றில் விஞ்ஞானமாணி பட்டத்தினையும், விஞ்ஞானக் கல்வியில் விஞ்ஞான முதுமாணி, M. Phil. மற்றும் Ph.D. ஆய்வுப் பட்டத்தையும் வழங்குகிறது.
- விவசாய பீடமானது ஆறு திணைக்களங்களைக் கொண்டிருப்பதுடன் விவசாயத்தில் விஞ்ஞானமாணி பட்டத்தினையும், விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தினையும் வழங்குகிறது.
- கலை கலாசார பீடமானது ஒன்பது திணைக்களங்களைக் கொண்டிருப்பதுடன் B.A, B.Ed., M.A, M.Ed., M.Phil மற்றும் Ph.D. ஆகிய பட்டங்களை பல்வேறு துறைகளில் வழங்குகிறது.
- வர்த்தக முகாமைத்துவ பீடமானது மூன்று திணைக்களங்களைக் கொண்டிருப்பதுடன், B.Com, BBA, முகாமைத்துவ பட்டப் பின்படிப்புக் கற்கை, MBA, மற்றும் Master of Development Economics (MDE) ஆகிய பட்டங்களையும் வழங்குகிறது.
- சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடமானது ஆறு திணைக்களங்களைக் கொண்டிருப்பதுடன் MBBS மற்றும் தாதியியலில் விஞ்ஞானமாணிப் பட்டத்தினையும் வழங்குகிறது.
- **திருகோணமலை வளாகமானது** தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய இரு பீடங்களையும், சித்த வைத்திய அலகையும் கொண்டிருப்பதுடன், கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவ விஞ்ஞானமாணி, மொழி மற்றும் தொடர்பாடலில் கலைமாமணி, கணனி இளநிலை, தகவல் தொழிநுட்ப இளநிலை, சித்தவைத்திய இளநிலை பட்டங்களையும் வழங்குகிறது.
- மேலும் பீடங்கள் **வெளிவாரிக் கற்கைகள் மற்றும் விரிவாக்கற் கற்கைகள் நிலையத்தினூடாக** வெளிவாரிப் பட்டக்கற்கையை பல்பலைக்கழக கல்வி வாய்ப்பினை அதிகளவான மாணவர்கள் பெறுவதற்காக வழங்குகிறது.

**ஆ. சாதனைகள்**

- ''முரண்பாட்டுக்குப் பின் மீட்சிக்கான அறிவு மற்றும் தொழில்நுட்பம்'' எனும் தலைப்பிலான சர்வதேச மாநாடு 2013ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெற்றதுடன் அதில் டாக்கா பல்கலைக்கழகம் மற்றும் தேசிய பல்கலைக்கழகம், சிங்கப்பூர் ஆகியவற்றிலிருந்து அழைப்பு பேச்சாளர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.
- பல்கலைக்கழக உலக வலையமைப்பு தரப்படுத்தலில் கிழக்குப் பல்கலைக்கழகமானது 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012ஆம் ஆண்டில் 720 இடங்களுக்கு முன்னோக்கி நகர்ந்து தற்போது 12,124ஆம் இடத்திலுள்ளது.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் விஞ்ஞானக் கல்வியில் விஞ்ஞான முதுமாமணி கற்கைகள் பாடசாலை ஆசிரியர்களின் திறனை மேம்படுத்தவும் வளப்படுத்தவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- முன்பிள்ளைப்பருவம் மற்றும் ஆரம்பக்கல்வி கல்வி இளநிலைக் பட்டக்கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- உயர்கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட ''கவிதா திறமை காண் போட்டியில்'' 17 விருதுகள் கிடைக்கப்பெற்றன.

நிதி நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறைபாடுகள் சீர்ப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டது.

- சௌக்கிய பராமரிப்பு பீட மாணவர்களால் "மெட்ஸ்கோப் 2012" கண்காட்சி நடாத்தப்பட்டது.
- எனது கனடா நாட்டிலிருந்தான இலங்கை வருகைக்குப் பின் புத்திஜீவிகளின் நாட்டை விட்டு வெளியேறுவதில்லான மாற்றம் அவதானிக்கப்பட்டது. மேலும் சில கல்விமான்கள் மீண்டும் வருவதற்கு விருப்பம் தெரிவித்தள்ளனர்.
- போர் மற்றும் குறுகிய எண்ணங்களால் இலக்குகளை அடைவதற்கு முன்னர் இல்லாதிருந்த பல்கலைக்கழக கற்றல் கற்பித்தலுக்கான உகந்ததொரு சூழல் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.
- சில ஆண்டு காலமாக இல்லாதிருந்த காமன்வெல்த் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு உறுப்பினர் அந்தஸ்து மீளவும் புதுப்பிக்கப்பட்டது.
- 24 மணி நேரமும் இயங்கக் முடியாதிருந்த இணைய சேவர் தொடர்பான குறைபாட்டை திருத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.
- திறந்த மூல மென்பொருளான "New Gen Lib" ஆனது கிழக்குப் பல்கலைக்கழக நூலக கிளைகளில் தற்போது நிறுவப்பட்டு மின் கற்றல் மூலப்பொருட்களை இலகுவாகத் தேடுவதன் மூலம் மாணவர்களினதும், ஊழியர்களினதும் ஆராய்ச்சி செயற்பாடுகளை மேம்படுத்தக் கூடியதாக உள்ளது.
- டெங்கு அபாயம் மற்றும் புற்றுநோய் என்பன பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், எமது மாணவர் மத்தியில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் கலாச்சார நிகழ்ச்சிகள், வீதி நாடகம், பயிற்சிப் பட்டறை போன்ற பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
- ஊழியர் அபிவிருத்தி நிலையத்தினூடாக கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களது அறிவாற்றல் மற்றும் திறமைகளை மேம்படுத்துவதற்காக பல்லேறு பயிற்சிப் பட்டறைகள் முன்னெடுக்கப்பட்டன.
- குறுகியகாலப் பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளின் அதிகரிப்பினூடாக கற்றல் கற்பித்தலுக்கான உகந்ததொரு சூழல் உருகாக்கப்பட்டது:

- **கட்டிட நிர்மாண செயற்றிட்டங்கள்:**
  1. விஞ்ஞான பீட கட்டிடத் தொகுதியின் விலங்கியல் பிரிவானது ரூபா. 199 மில்லியன் செலவில் 2013 மாசி மாதம் கட்டி முடிக்கப்பட்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.
  2. கலை கலாசார பீடத் தொகுதியானது 2013 புரட்டாதி மாத இறுதியில் கட்டி முடிக்கப்படவுள்ளது. (இதன் மொத்தச் செலவினம் ரூபா 121 மில்லியனாகும்)
  3. புதிய நூலக கட்டிடமானது 2013 புரட்டாதி மாத இறுதியில் கட்டி முடிக்கப்படவுள்ளது. (இதன் மொத்தச் செலவினம் ரூபா 171 மில்லியனாகும்)
  4. வர்த்தக முகாமைத்துவ பீடத் தொகுதியானது 2013 ஐப்பசி மாத இறுதியில் கட்டி முடிக்கப்படவுள்ளது. (இதன் மொத்தச் செலவினம் ரூபா 230 மில்லியனாகும்)
  5. திருகோணமலை வளாகத்தில் விஞ்ஞான ஆய்வுகூட கட்டுமானப்பணிகளில் 15% முடிவடைந்துள்ளது.
  6. திருகோணமலை வளாகத்தில் மாணவர் பொழுது போக்கு மையத்தின் நிர்மாணப் பணிகளில் 10% முடிவடைந்துள்ளது.

- பின்வரும் அங்கிகரிக்கப்பட்ட திட்டங்கள் தற்போது கேள்விப்பத்திர மனுக்கள் அழைக்கும் செயற்பாட்டு நிலையில் உள்ளன:
  1. சௌக்கிய பராமரிப்பு பீடத்தின் கட்டிடத்தொகுதி. (மொத்தச் செலவினம் ரூபா 360 மில்லியனாகும்)
  2. கலை கலாசார பீடத்தின் பார்வையாளர் அரங்கும் விரிவுரை மண்டபமும் இணைந்த கட்டிடம். (மொத்தச் செலவினம் ரூபா 44.6 மில்லியனாகும்)
  3. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட போதனாசிரியர் கட்டிடத் தொகுதி. (மொத்தச் செலவினம் ரூபா 299 மில்லியனாகும்)
  4. திருகோணமலை வளாக விளையாட்டு மைதானம். (மொத்தச் செலவினம் ரூபா 50 மில்லியனாகும்)
- திருகோணமலை வளாகத்தில் பின்வரும் திட்டங்களுக்காக கேள்விமனுக்கள் கோரப்பட்டுள்ளன:
  1. தகவல் தொழிநுட்ப நிலையம்.
  2. நூலகம்.
  3. பிரயோக விஞ்ஞான பீட கட்டிடம்
- புதிய விவசாயபீடத் தொகுதிக்கான செயற்றிட்டமானது உயர் கல்வியமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு ஒப்புதலுக்காக கையளிக்கப்பட்டுள்ளது. (மொத்தச் செலவினம் ரூபா 303 மில்லியனாகும்)
- திருகோணமலை வளாக சித்த வைத்திய பிரிவு கட்டிட ஆலோசகர் நியமனம் செயற்பாட்டில் உள்ளது.
- மேலதிக மாணவர் உள்வாங்கல் 2011-2012 இற்கான அரை நிரந்தரக் கட்டிட நிர்மாண மொத்தச் செலவினம் ரூபா 91.9 மில்லியன்.
  1. வந்தாறுமூலை வளாக பரீட்சை மண்டபம் முடிவடைந்துள்ளது.
  2. விவசாய பீட 150 மாணவர்களுக்கான விரிவுரை மண்டபம் தற்போது முடிவடைந்துள்ளது.
  3. வர்த்தக முகாமைத்துவ பீட 300 மாணவர்களுக்கான விரிவுரை மண்டபம் தற்போது முடிவடைந்துள்ளது.
  4. விஞ்ஞான பீட 350 மாணவர்களுக்கான விரிவுரை மண்டப நிர்மாணம் தற்போது முடிவடைந்துள்ளது.
  5. சௌக்கிய பராமரிப்பு பீட 300 மாணவர்களுக்கான விரிவுரை மண்டபத்துடன் கூடிய விரிவுரையாளர் அறை என்பன தற்போது முடிவடைந்துள்ளன.
  6. திருகோணமலை வளாக 150 மாணவர்களுக்கான விரிவுரை மண்டப நிர்மாணம் தற்போது முடிவடைந்துள்ளது.
  7. மாணவர் உடற்பயிற்சி மண்டபம் முடிவடையும் தறுவாயில் உள்ளது.

- **மாணவர்களுக்கான விடுதி வசதிகளின் நிலவரம்:**

1. நிரந்தரக் கட்டிடங்கள் - கிழக்குப் பல்கலைக்கழகம்

| இல. | திட்டங்கள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட 250 ஆண் மாணவர்களுக்கான விடுதி நிர்மாணம் | பத்திரிகை விளம்பரம் மூலம் நிர்மாணத்திற்கான கேள்விப்பத்திரம் 11.09.2013 இல் கோரப்பட்டுள்ளது |
| 2 | வந்தாறுமூலை வளாகத்தில் 250 ஆண் மாணவர்களுக்கான விடுதி நிர்மாணம் | வரைபு மற்றும் கட்டிட வேலைகளுக்காக ஊநுஊடீ க்கு |

| | | |
|---|---|---|
| | (உயர் கல்வி அமைச்சின் சுனாமி மீள் கட்டுமான திட்டத்தின் கீழ்) | வழங்கப்பட்டுள்ளது |
| 3 | வந்தாறுமூலை வளாகத்தில் 400 பெண் மாணவர்களுக்கான விடுதி நிர்மாணம் | அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு கேள்விமனு கோரல் செயற்பாட்டில் உள்ளது |
| 5 | திருமலை வளாகத்தில் 250 ஆண் மாணவர்களுக்கான விடுதி நிர்மாணம் | 10மூ வரையிலான வேலைப்பணிகள் முடிவடைந்துள்ளது |
| 6 | திருமலை வளாகத்தில் 250 பெண் மாணவர்களுக்கான விடுதி நிர்மாணம் | |

2. அரை நிரந்தரக் கட்டிடம் - கிழக்குப் பல்கலைக்கழகம்

| **இல.** | **திட்டம்** | **நிலை** |
|---|---|---|
| 1 | 80 சௌக்கிய பராமரிப்பு பீட மாணவர்களுக்கான விடுதி நிர்மாணம் | வேலைகள் முடிக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு தயார் நிலையில் உள்ளது. |
| 2 | வந்தாறுமூலை வளாகத்தில் 100ஆண் மற்றும் 100 பெண் மாணவர்களுக்கான விடுதி நிர்மாணம். (2ஆம் கட்டம்) | வேலைகள் முடிக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு தயார் நிலையில் உள்ளது. |

- பின்வரும் வழிமுறைகள் பட்டதாரிகளின் வேலை வாய்ப்பினை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ளன:

  i. பல ஆங்கில போதனாசிரியர்கள் ஒப்படைக்கப்பட்ட பணி நிறைவேற்றும் அடிப்படையில் எமது பட்டதாரிகளின் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.
  ii. QIG மாணியத்தின் உதவியுடன் வேலையற்ற பட்டதாரிகளை வேலை உருவாக்குவோராக மாற்றுவதற்கு "வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையத்தை" அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
  iii. பட்டதாரிகளின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவினை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
  iv. மாணவர் மதிப்பீட்டின் மூலமாக கற்பித்தல் தரத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
  v. கற்றல் கற்பித்தல் ஆற்றலை மேம்படுத்துவதற்கு புதிய தகவல் இணையம் தயார்ப்படுத்தும் செயற்பாட்டில் உள்ளது.
  vi. மும்மொழித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
  vii. தற்போதுள்ள திட்டங்களுக்கு மேலதிகமாக பட்டதாரிகளுக்கான பயிற்சி திட்டங்களை மேம்படுத்த கைத்தொழில் வல்லுனர்களுடன் பலதரப்பட்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.
  viii. கலை கலாசார பீடத்தின் கலைமாணி பாடநெறியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஓர் கட்டாய பாட அலகாக சேர்க்கப்பட்டுள்ளது.

### இ. சவால்கள்

**விடுதி வசதிகள்:**

- பல்கலைக்கழகத்தின் தற்போதைய மாணவர் எண்ணிக்கை புதிய உள்வாங்கலுடன் 5364 ஆகும். எமது பல்கலைக்கழகமானது 1614 மாணவர்களுக்கான விடுதி

வசதியையே வழங்கக் கூடிய நிலையில் உள்ளது. கிழக்குப் பல்கலைக் கழகமானது தனியார் விடுதி வசதிகள் அற்ற தூரப் பிரதேசத்தில் உள்ளது. ஆகவே நாம் முதலாம் ஆண்டு மற்றும் இறுதியாண்டு மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கும் வழமையான விதி முறைகளுக்கு மாறாக சகல மாணவர்களுக்கும் விடுதி வசதியை வழங்க வேண்டியுள்ளது. இருப்பினும் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் யாவும் நிறைவடைந்தால் விடுதி வசதி வழங்குவதில் எவ்விதமான பிரச்சனைகளும் எழாதென்று நான் நினைக்கிறேன்.

- முப்பது ஆண்டுகால யுத்தம் எமது ஊழியர்களின் உள்மனதில் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது இதனால் இவர்கள் தமது பிடிவாதமான மனநிலையை மாற்றுவதற்கு மேலதிக நெகிழ்வுத் தன்மைப் போக்கை எதிர்பார்க்கிறார்கள். அவர்களது இந்த மனப்பான்மையில் மாற்றத்தைக் கொண்டு வந்து ஒருங்குபடுத்த குறைந்தது குறுகிய காலம் வெளிநாடுகளில் பயிற்சி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதற்காக அரசாங்கமானது மேலதிக நிதியை ஒதுக்க வேண்டும்.
- நீடித்த யுத்தத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட நகர்வுத் தன்மையும் எமது ஊழியர்களின் தொடர்பாடல் திறனை மட்டுப்படுத்தியது, இதுவும் எமது பல்கலைக்கழகத்தை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுவர இடையூறான காரணியாக இருந்தது.
- நேர் மறையான மனப்பாங்கை உருவாக்குவதற்கு எமது மாணவர்களுக்கு அத்தியாவசியமான பொழுதுபோக்கு வசதிகள் இல்லாதிருந்தது. எமது மாணவர்களிடையே வெளிப்பட்டுவரும் திறமைகளை வளர்த்தெடுப்பதற்கு விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளில் உடனடிக் கவனம் செலுத்தப்படவேண்டும்.
- போதியளவு ஊழியர்கள் இன்மை மற்றும் ஊழியர்களின் அறிவின்மை காரணமாக பல்கலைக்கழகமானது முக்கிய செயற்பாட்டு அலகுகளான தரவு மற்றும் ஆவணப்படுத்தல் என்பவற்றைக் கொண்டிருக்கவில்லை. ''திட்டமிடல் பிரிவு'', சட்டம் மற்றும் ஆவணப்பிரிவு'' மற்றும் ''தரவு பராமரிப்புப் பிரிவு'' என்பவற்றை ஏற்படுத்த அதிக ஊழியர்களை வழங்கவேண்டும்.
- கடந்த பல வருடங்களாக கிழக்குப் பல்கலைக்கழகமானது நிரந்தரமான நிதியாளரைக் கொண்டிருக்கவில்லை, இது நாம் நிட்சயித்த இலக்கை அடைவதற்கு தடையாக இருந்தது. நிரந்தர நிதியாளரை நியமிப்பதற்கு பலமுறை முயற்சிகள் செய்யப்பட்டும் அனைத்து முயற்சிகளும் பயனற்றதாகப் போய்விட்டன. இவ்வாறான நிலையில் பல்கலைக்கழகத்தை நிர்வகிப்பது ஒரு பெரிய சவாலாகவே உள்ளது.
- வளாகத்தில் ஊழியர்களுக்கான தங்குமிட வசதிகள் குறைவாகவே உள்ளன.
- கிழக்குப் பல்கலைக்கழகமானது தாழ்வான பகுதியில் அமைந்துள்ளமையால், ஒவ்வொரு வருடமும் அடிக்கடி சடுதியான வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. இதனை எதிர்கொள்வதற்கு புதிய கட்டிட வடிவமைப்பு அமுல்படுத்தப்பட வேண்டும்.

**ஈ. எதிர்காலத் திட்டங்கள்**

- உலகளாவிய வேலை வாய்ப்புள்ள பட்டதாரிகளை உருவாக்க எமது மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக, உட்கட்டமைப்பு மற்றும் ஆய்வுகூட வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும்.
- ஆய்வுகளுக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட வேண்டும். உதாரணமாக: பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் ஆய்வு நிதிக்கு மேலதிகமாக 2013அம் ஆண்டு ரூபா மூன்று மில்லியன் நிதி ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிக்க ஒதுக்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு வருடமும் சர்வதேச ஆராய்ச்சிக் கருத்தரங்கு ஒழுங்குபடுத்தப்படுகிறது.
- உலக தரப்படுத்தலில் எமது பல்கலைக்கழகத்தை 5000ஆம் இடத்திற்கு உயர்த்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. தரப்படுத்தலை உயர்த்துவதற்காக எமது இணையத்தளமானது பயன்படுத்துவோர்க்கு இலகுவானதாக இருக்கும் வகையிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் அதனுடன் தொடர்புடையவையும் இணைக்கப்பட்டு மறுசீரமைக்கப்படுகிறது.
- QIG மானியத்தின் உதவியுடன் வேலையற்ற பட்டதாரிகளை வேலை உருவாக்குவோராக மாற்றுவதற்கு “வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையத்தை” அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
- ஏற்கெனவே இருக்கும் இணைப்புக்களான இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இந்திய ஸ்ரீசாயிராம் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு மேலதிகமாக வெளிநாட்டு, உள்நாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்சி நிலையங்களுடன் இணைப்பினை ஏற்படுத்தல்.
- மட்டக்களப்பை சமூகத்தின் அறிவுடைய நகரமாக உருவாக்கும் நோக்கத்துடன் சுய நிதிக் கற்கைகளை அதிகமாக அறிமுகப்படுத்தி அதன் மூலம் சமூகத்தின் தொழில் ரீதியான திறன் மற்றும் அறிவினை அதிகரிப்பதனூடாக தமது தரத்தினை மேம்படுத்துவதுடன் தேசிய பொருளாதாரத்திற்கும் பங்களிப்புச் செய்யலாம்.
- வெளிநாட்டு மாணவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் தாங்கள் தேர்ந்தெடுத்தவர்களை சௌக்கிய பராமரிப்ப விஞ்ஞான பீடத்தில் நியமித்தல் மற்றும் எமது மாணவர்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுப்ப முயற்சி செய்தல். ஐக்கிய இராச்சியத்திலுள்ள சில மாணவர்கள் தமது விருப்பத்தினை வெளியிட்டுள்ளனர்.
- மேலதிகமான தகவல் தொழில் நுட்பம் மற்றும் ஆங்கில பாடத்திட்டத்தினை சகல பீடங்களிலும் உள்ளடக்கல், மொழி ஆய்வு கூடம் மற்றும் சுயகற்றல் நிலையங்களை நிறுவுவதன் மூலம் எமது பட்டதாரிகளுக்கு தேவையான தொடர்பாடல் மற்றும் தகவல் தொழலில் நுட்ப திறனை விருத்தி செய்து அவர்களை வேலை வாய்ப்புள்ளவர்களாக மாற்றல்.
- மதுபாவனை, சிறுவர் மீதான வன்முறை, டெங்கு அபாயம் போன்ற சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் இவை தொடர்பான ஆய்வினை ஊக்குவித்தல்.
- மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வயோதிபர்களது உடல் நலன் வசதிகளின் தரத்தினை மேம்படுத்தல்.
- உள்ளூர் கலாச்சாரம் மற்றும் உள்ளூர் பொருளாதாரம் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக தொடர்ச்சியான கண்காட்சி, செயன்முறை விளக்கம், தெரு நாடகங்களை அறிமுகப்படுத்தல்.
- சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட மாணவர்களுக்கான ‘‘சமாதான மருத்துவம்’’ கற்கைத் திட்டம்.
- புதிய பீடங்களை உருவாக்குதல் மற்றும் புதிய கற்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உலக வேலைவாய்புள்ள பட்டதாரிகளாக மற்றும் நாட்டின் சிறந்த குடிமக்களாக்குதல்.
- வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் ஏற்கெனவே உள்ள பாடத்திட்டங்களுக்கு மேலதிகமாக ஒவ்வொரு பீடத்திலும் இறுதியாண்டு மாணவர்களுக்கு வேலைவாய்பு மற்றும்/கைத்தொழிற் பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி தனியார் துறையில் அவர்களது திறமைகளை வெளிப்படுவதனூடாக வேலைவாய்பினை அதிகரித்தல்.
- “வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையம்” அமைத்தல்.

- தொடர்பாடல் ஆற்றலை அதிகரித்து அதனூடாக சமூக நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்கு மொழி ஆய்வுகூடமொன்று அமைக்கப்பட்டும்
- எல்லோருக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை வழங்கும் நோக்குடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையத்தினை வலுப்படுத்தல்.
- மருந்தக விஞ்ஞானமாணி கற்கை அறிமுகம்.

## 4. வளங்கள் மற்றும் மாணவர் விபரம்:

<table>
<tr><th>பீடம்</th><th>கற்கைநெறி</th><th>மொத்த மாணவர் தொகை</th><th>மொத்த கல்விசார் ஊழியர் தொகை</th><th>மொத்த கல்விசாரா ஊழியர் தொகை</th></tr>
<tr><td colspan="5">அ. கிழக்குப் பல்கலைக்கழகம்</td></tr>
<tr><td>கலை கலாசாரம்</td><td>கலை இளமானி</td><td>1220</td><td>53</td><td>20</td></tr>
<tr><td>விவசாயம்</td><td>விவசாய விஞ்ஞான இளமானி</td><td>175</td><td>27</td><td>36</td></tr>
<tr><td>வர்த்தக</td><td>வணிக முகாமைத்துவ இளமானி</td><td>324</td><td rowspan="2">24</td><td rowspan="2">14</td></tr>
<tr><td>முகாமைத்துவம்</td><td>வர்த்தக இளமானி</td><td>318</td></tr>
<tr><td rowspan="2">சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள்</td><td>மருத்துவ இளமானி</td><td>265</td><td rowspan="2">22</td><td rowspan="2">29</td></tr>
<tr><td>தாதியல் இளமானி</td><td>45</td></tr>
<tr><td rowspan="2">விஞ்ஞானம்</td><td>உயிரியல் விஞ்ஞான இளமானி</td><td>188</td><td rowspan="2">32</td><td rowspan="2">37</td></tr>
<tr><td>பௌதீகவியல் விஞ்ஞான இளமானி</td><td>234</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>2769</td><td>162</td><td>136</td></tr>
<tr><td colspan="5">ஆ. திருகோணமலை வளாகம்</td></tr>
<tr><td rowspan="2">தொடர்பாடலும், வர்த்தக முகாமைத்துவமும்</td><td>முகாமைத்துவ இளமானி</td><td>219</td><td>05</td><td>01</td></tr>
<tr><td>தொடர்பாடல் இளமானி</td><td>242</td><td>06</td><td>-</td></tr>
<tr><td>பிரயோக விஞ்ஞானம்</td><td>கணனி விஞ்ஞான இளமானி</td><td>10</td><td>05</td><td>01</td></tr>
<tr><td>சித்த வைத்தியப் பிரிவு</td><td>சித்த வைத்தியமும் அறுவை சிகிச்சையும் இளமானி</td><td>60</td><td>05</td><td>04</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>531</td><td>21</td><td>06</td></tr>
</table>

## 5. உள்ளூர் மாணவர்களின் விபரம்:

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | 2012 இல் உள் வாங்கல் | 1ம் வருட | 2ம் வருட | 3ம் வருட | 4ம் வருட | 5ம் வருட | பட்டதாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மாணவர் எண்ணிக்கை | | | | | |
| **அ. கிழக்குப் பல்கலைக்கழகம்** | | | | | | | | | |
| கலை கலாசாரம் | கலை இளமானி | தமிழ் | - | 261 | 253 | 338 | 368 | - | 340 |
| விவசாயம் | விவசாய விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | - | 73 | 42 | 36 | 24 | - | 27 |
| வர்த்தக முகாமைத்துவம் | வணிக முகாமைத்துவ இளமானி | ஆங்கிலம் | - | 105 | 88 | 79 | 52 | - | 91 |
| | வர்த்தக இளமானி | ஆங்கிலம் | - | 94 | 75 | 135 | 14 | - | |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் | மருத்துவ இளமானி | ஆங்கிலம் | - | 50 | 51 | 66 | 35 | 63 | 27 |
| | தாதியல் இளமானி | ஆங்கிலம் | - | 26 | 09 | 05 | 04 | - | - |
| விஞ்ஞானம் | உயிரியல் விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | - | 114 | 38 | 17 | 19 | - | 16 |
| | பௌதீகவியல் விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | - | 133 | 49 | 20 | 32 | - | |
| **மொத்தம்** | | | **-** | **856** | **605** | **696** | **549** | **63** | **501** |
| **ஆ. திருகோணமலை வளாகம்** | | | | | | | | | |
| தொடர்பாடலும், வர்த்தக முகாமைத்-துவமும் | முகாமைத்துவ இளமானி | ஆங்கிலம் | - | 51 | 50 | 58 | 17 | - | 28 |
| | தொடர்பாடல் இளமானி | ஆங்கிலம் | - | 51 | 57 | 46 | 15 | - | 76 |
| பிரயோக விஞ்ஞானம் | கணனி விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | - | - | - | 10 | - | - | - |
| சித்த வைத்தியப் பிரிவு | சித்த வைத்தியமும் அறுவை சிகிச்சையும் இளமானி | ஆங்கிலம் | - | 11 | 16 | 19 | - | - | - |
| **மொத்தம்** | | | **-** | **113** | **123** | **133** | **32** | **-** | **104** |

**6. கல்விசார் ஊழியர்களின் விபரம்:**

**அ. கிழக்குப் பல்கலைக்கழகம்**

| **பீடம்** | **பாடம்** | **மொழி மூலம்** | **சிரேஷ்ட பேராசிரியர்** | **பேராசிரியர்** | **சிரேஷ்ர விரிவுரை யாளர்/ விரிவுரை யாளர் (தகுதி காண்)** | **போதனாசிரியர்/ வருகைதரு ஊழியர்** |
|---|---|---|---|---|---|---|
| கலை கலாசாரம் | அராபிய மொழி, நுண் கலை, நாடகமும் அரங்கியலும், புவியியல், தமிழ், ஒப்பீட்டுச் சமயம், கிறிஸ்தவம், கல்வியியல், இஸ்லாம், இந்து நாகரிகம், வரலாறு, பொருளியல், சமூக விஞ்ஞானம், அரசியல் விஞ்ஞானம், மொழி | தமிழ்/ ஆங்கிலம் | 0 | 01 | 39 | 11 |
| விவசாயம் | விவசாய உயிரியல் விஞ்ஞானம், விவசாய இரசாயனவியல், விவசாய பொருளியல், விவசாய இயந்திரவியல், மிருக விஞ்ஞானம், பயிர் விஞ்ஞானம் | ஆங்கிலம் | 0 | 0 | 21 | 04 |
| வர்த்தக முகாமைத்துவம் | வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல், மனிதவள அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், நிறுவன அபிவிருத்தி, கணக்கியலும் நிதியியலும், வர்த்தகப் பொருளியல், அபிவிருத்திப் பொருளியல் | ஆங்கிலம் | 0 | 0 | 22 | 14 |
| விஞ்ஞானம் | தாவரவியல, இரசாயணவியல், விலங்கியல், பௌதீகவியல், கணிதவியல், கணனி விஞ்ஞானம் | ஆங்கிலம் | 0 | 0 | 25 | 15 |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் | மனித உயிரியல், துணை சுகாதார விஞ்ஞானங்கள், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி, பிணியியல் விஞ்ஞானம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு, நோய் உடற் தொழிற்பாட்டியல் | ஆங்கிலம் | 0 | 01 | 21 | 42 |
| **மொத்தம்** | | | **0** | **02** | **128** | **86** |

ஆ. திருகோணமலை வளாகம்

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | சிரேஷ்ட விரிவுரையாளர்/ விரிவுரையாளர் (தகுதிகாண்) |
|---|---|---|---|
| தொடர்பாடலும் வர்த்தக முகாமைத்துவமும் | முகாமைத்துவம் | ஆங்கிலம் | 05 |
| | தொடர்பாடல் | ஆங்கிலம் | 06 |
| பிரயோக விஞ்ஞானம் | கணனி விஞ்ஞானம் | ஆங்கிலம் | 05 |
| | பௌதீக விஞ்ஞானம் | ஆங்கிலம் | |
| சித்த வைத்தியப் பிரிவு | - | ஆங்கிலம் | 05 |
| **மொத்தம்** | | | **21** |

## 7. கல்விசாரா ஊழியர்களின் விபரம்:

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| பீடம்/திணைக்களம்/பகுதி/கிளைகள்/ அலகுகள் | மிகவும் மூத்த ஊழியர்[1] | மூத்த ஊழியர்[2] | இளம் ஊழியர்[3] | சிற்றூழியர்[4] |
|---|---|---|---|---|
| உபவேந்தர் அலுவலகம், உபவேந்தர் விடுதி | 1 | 1 | 2 | 1 |
| பதிவாளர் அலுவலகம் | 1 | - | 2 | 1 |
| செனட் | - | 1 | 2 | 1 |
| நிர்வாகப் பிரிவு | 1 | - | 20 | - |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 1 | 1 | 1 | 1 |
| தொழில் வழிகாட்டல் பிரிவு | - | - | 1 | - |
| தாபனங்கள் - கல்விசாரா | 1 | - | 3 | - |
| தாபனங்கள் - கல்விசார் | 1 | - | 5 | 1 |
| வினியோகங்கள் பகுதி | 1 | - | 7 | 2 |
| நிதியாளர் அலுவலகம் | 3 | 4 | 3 | 1 |
| விவசாய பீடம் | 1 | 3 | 15 | 13 |
| வர்த்தக முகாமைத்துவ பீடம் | 1 | - | 7 | 6 |
| விஞ்ஞான பீடம் | 1 | 9 | 10 | 10 |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம் | 1 | 1 | 20 | 9 |
| கலை கலாசார பீடம் | 1 | 4 | 10 | 6 |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிலையம் | - | - | 2 | 1 |
| ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு | - | - | - | 1 |
| பரீட்சைகள் கிளை | 1 | 2 | 9 | 2 |
| வேளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம் | - | 1 | 3 | 1 |
| நூலகம் | - | - | 8 | 1 |
| மருத்துவ நிலையம் | 1 | - | 7 | - |
| உடற்கல்விப் பிரிவு | - | - | 2 | 1 |
| நலன்புரிப் பிரிவு | 1 | - | 2 | 1 |
| பராமரிப்புப் பிரிவு | 1 | - | 9 | 16 |
| விடுதிகள் | - | - | 9 | 1 |
| பாதுகாப்புப் பிரிவு | 1 | 2 | 15 | - |
| **மொத்தம்** | **20** | **29** | **174** | **77** |

1 - நிர்வாக மற்றும் செயல்நிலை
2 – மூத்த பணியாளர் நிலை
3 - எழுதுவினைஞர் மற்றும் அது சார்ந்த நிலை
4 – மேற்குறித்த நிலைகளுக்குக் கீழ்

ஆ. திருகோணமலை வளாகம்

| பீடம்/திணைக்களம்/பிரிவு/ கிளை/அலகு | மிகவும் மூத்த[1] | மூத்த ஊழியர்[2] | இளம் ஊழியர்[3] | சிற்றூழியர்[4] |
|---|---|---|---|---|
| பொது நிர்வாகம் | 01 | 07 | 03 | - |
| பராமரிப்பு பகுதி | - | - | 02 | - |
| பரீட்சைகள் பகுதி | 0 | 01 | 01 | 01 |
| தாபனங்கள் பகுதி | - | 01 | - | - |
| நலன்புரிப் பகுதி | - | 01 | - | - |
| நிதிப் பிரிவு | 01 | 04 | 01 | 01 |
| நூலகம் | 02 | 04 | 01 | - |
| வர்த்தக முகாமைத்துவத் துறை | - | - | - | 01 |
| மொழியியலுக்கும் தொடர்பாடலுக்குமான துறை | - | - | - | - |
| பிரயோக விஞ்ஞான பீடம் | - | - | 01 | 01 |
| சித்த வைத்தியப் பிரிவு | - | - | 01 | 02 |
| **மொத்தம்** | **04** | **18** | **10** | **06** |

## 8. ஆராச்சிகள கண்டுபிடிப்புக்கள், வெளியீடுகள் பற்றிய விபரம்:

**அ.** கிழக்குப் பல்கலைக்கழகம்

| 1. விவசாய பீடம் | | | |
|---|---|---|---|
| விபரம் | வெளியிடப் பட்டவை | சந்தைப் படுத்தப்பட்டவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. ஆராச்சிகள் | 44 | - | 27 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | 01 | - | - |
| இ. பத்திரிகைகள் | 14 | - | 02 |
| ஈ. புத்தகங்கள் | 06 | 08 | 01 |
| உ. கட்டுரைகள் | 12 | - | 11 |
| ஊ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **77** | **08** | **41** |
| **2. கலை கலாசார பீடம்** | | | |
| விபரம் | வெளியிடப் பட்டவை | சந்தைப் படுத்தப்பட்டவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. ஆராச்சிகள் | 18 | - | - |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | - | - | - |
| ஈ. புத்தகங்கள் | 05 | - | - |
| உ. கட்டுரைகள் | 32 | - | - |
| ஊ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **55** | **-** | **-** |
| **3. வர்த்தக முகாமைத்துவ பீடம்** | | | |
| விபரம் | வெளியிடப் பட்டவை | சந்தைப் படுத்தப்பட்டவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |

| | | | |
|---|---|---|---|
| அ. ஆராச்சிகள் | 05 | - | 09 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | - | - | 01 |
| ஈ. புத்தகங்கள் | 03 | - | - |
| உ. கட்டுரைகள் | 02 | 02 | - |
| ஊ. ஏனையவை | 01 | - | - |
| **மொத்தம்** | **11** | **02** | **10** |
| **4. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்** | | | |
| **விபரம்** | **வெளியிடப் பட்டவை** | **சந்தைப் படுத்தப்பட்டவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| அ. ஆராச்சிகள் | - | - | 03 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | - | - | - |
| ஈ. புத்தகங்கள் | - | - | - |
| உ. கட்டுரைகள் | - | - | - |
| ஊ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **-** | **-** | **03** |
| **5. விஞ்ஞான பீடம்** | | | |
| **விபரம்** | **வெளியிடப் பட்டவை** | **சந்தைப் படுத்தப்பட்டவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| அ. ஆராச்சிகள் | 66 | 01 | 03 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | - | - | - |
| ஈ. புத்தகங்கள் | 03 | - | - |
| உ. கட்டுரைகள் | - | - | - |
| ஊ. ஏனையவை | - | - | 1 |
| **மொத்தம்** | **69** | **01** | **04** |

**ஆ. திருகோணமலை வளாகம்**

| **விபரம்** | **வெளியிடப் பட்டவை** | **சந்தைப் படுத்தப்பட்டவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
|---|---|---|---|
| அ. ஆராச்சிகள் | - | - | 03 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | - | - | - |
| ஈ. புத்தகங்கள் | - | - | - |
| உ. கட்டுரைகள் | - | - | - |
| ஊ. ஏனையவை | - | - | 01 |
| **மொத்தம்** | **-** | **-** | **04** |

## 9. நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றின் விபரம்

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| 1. விவசாய பீடம் | | | |
|---|---|---|---|
| விபரம் | கலந்து கொண்டவை | நடத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | 04 | 04 | 01 |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | 01 | 01 | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | 28 | 02 | 02 |
| ஊ. ஏனையவை | 22 | - | 05 |
| **மொத்தம்** | **55** | **07** | **08** |

| 2. கலை கலாசார பீடம் | | | |
|---|---|---|---|
| விபரம் | கலந்து கொண்டவை | நடாத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | 10 | 01 | 01 |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | 02 | 01 | 02 |
| ஊ. ஏனையவை | 21 | 06 | 05 |
| **மொத்தம்** | **38** | **08** | **09** |

| 3. வர்த்தக முகாமைத்துவ பீடம் | | | |
|---|---|---|---|
| விபரம் | கலந்து கொண்டவை | நடாத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | 03 | 01 | - |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | 03 | - | - |
| ஊ. ஏனையவை | 16 | 11 | 01 |
| **மொத்தம்** | **22** | **12** | **01** |

| 4. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் | | | |
|---|---|---|---|
| விபரம் | கலந்து கொண்டவை | நடாத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | - | 01 | 01 |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | 01 | 01 | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | 06 | 11 | - |
| ஊ. ஏனையவை (கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள்) | 09 | 06 | 02 |
| **மொத்தம்** | **16** | **19** | **03** |

| 5. விஞ்ஞான பீடம் | | | |
|---|---|---|---|
| விபரம் | கலந்து கொண்டவை | நடாத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | 02 | 01 | 01 |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | 03 | 02 | 01 |
| உ. சான்றிதழ் கற்கை | - | - | - |
| ஊ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **05** | **03** | **02** |

**ஆ. திருகோணமலை வளாகம்**

| விபரம் | கலந்து கொண்டவை | நடாத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
|---|---|---|---|
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | 01 | 01 | - |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | - | - | - |
| ஊ. ஏனையவை | 05 | 05 | - |
| **மொத்தம்** | **06** | **06** | **-** |

## 10. பெற்ற விருதுகளின் விபரம்:

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| விபரம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விசார் ஊழியர் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **1. விவசாய பீடம்** | | | |
| அ. உள்நாட்டு விருதுகள் | 04 | 02 | - |
| ஆ. அகில இலங்கை விருதுகள் | - | - | - |
| இ. சர்வதேச விருதுகள் | - | - | - |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **04** | **02** | **-** |
| **2. கலை கலாசார பீடம்** | | | |
| **விபரம்** | **விருதுகளின் எண்ணிக்கை** | **கல்விசார் ஊழியர் எண்ணிக்கை** | **மாணவர் எண்ணிக்கை** |
| அ. உள்நாட்டு விருதுகள் | 01 | - | - |
| ஆ. அகில இலங்கை விருதுகள் | 01 | 01 | - |
| இ. சர்வதேச விருதுகள் | - | - | - |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **02** | **01** | **-** |
| **3. வர்த்தக முகாமைத்துவ பீடம்** | | | |
| **விபரம்** | **விருதுகளின் எண்ணிக்கை** | **கல்விசார் ஊழியர் எண்ணிக்கை** | **மாணவர் எண்ணிக்கை** |
| அ. உள்நாட்டு விருதுகள் | 01 | - | - |
| ஆ. அகில இலங்கை விருதுகள் | - | - | - |
| இ. சர்வதேச விருதுகள் | - | - | - |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **01** | **-** | **-** |
| **4. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம்** | | | |
| **விபரம்** | **விருதுகளின் எண்ணிக்கை** | **கல்விசார் ஊழியர் எண்ணிக்கை** | **மாணவர் எண்ணிக்கை** |
| அ. உள்நாட்டு விருதுகள் | - | - | - |
| ஆ. அகில இலங்கை விருதுகள் | - | - | - |
| இ. சர்வதேச விருதுகள் | 01 | 01 | - |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **01** | **01** | **-** |
| **5. விஞ்ஞான பீடம் (எதுவுமில்லை)** | | | |

**ஆ. திருகோணமலை வளாகம்**

| விபரம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விசார் ஊழியர் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ. உள்நாட்டு விருதுகள் | - | - | - |
| ஆ. அகில இலங்கை விருதுகள் | - | - | - |
| இ. சர்வதேச விருதுகள் | 01 | - | 01 |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **01** | **-** | **01** |

## 11. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைகள் தொடர்பான விபரம்:

**அ. கிழக்குப் பல்கலைக்கழகம்**

| பீடம் | கற்கைநெறி | மொழி | முது நிலை |
|---|---|---|---|
| விஞ்ஞான பீடம் | M.Sc in Science Education | ஆங்கிலம் | 01 |
| **மொத்தம்** | | | **01** |

## 12. மீண்டெழும் செலவீன விபரம்:

**அ. கிழக்குப் பல்கலைக்கழகம்**

| விபரம் | 2011 ரூபா. | 2012 ரூபா. |
|---|---|---|
| ஆளணி ஊதியம் | 278,295,941.69 | 314,543,938.91 |
| பிரயாணம் | 1,324,620.30 | 1,173,847.69 |
| விநியோகம் | 20,538,845.73 | 23,681,136.36 |
| பராமரிப்பு | 8,506,836.13 | 9,872,207.49 |
| ஒப்பந்தம் வேலை | 48,786,417.51 | 61,387,309.09 |
| ஏனையவை | 10,544,669.74 | 16,428,218.96 |
| **மொத்தம்** | **367,997,331.10** | **427,086,658.50** |

**ஆ. திருகோணமலை வளாகம்**

| விபரம் | 2011 ரூபா. | 2012 ரூபா. |
|---|---|---|
| ஆளணி ஊதியம் | 33,554,885.25 | 44,844,297.35 |
| பிரயாணம் | 267,113.78 | 205,965.28 |
| விநியோகம் | 4,262,968.12 | 6,312,522.67 |
| பராமரிப்பு | 2,413,526.93 | 2,924,883.12 |
| ஒப்பந்தம் வேலை | 27,394,627.28 | 38,192,975.88 |
| ஏனையவை | 1,692,524.28 | 3,231,742.74 |
| **மொத்தம்** | **69,585,663.64** | **95,712,387.04** |

## 13. மூலதனச் செலவு விபரம்:

**அ. கிழக்குப் பல்கலைக்கழகம்**

| விபரம் | 2011 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| அ. தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் கொள்வனவு | 14,230,524.46 | 24,972,730.64 |
| ஆ. இயந்திரங்கள் கொள்வனவு | - | - |
| இ. கட்டிடம் மற்றும் கட்டமைப்புச் செலவு | 9,815,888.46 | 261,251,304.74 |
| ஈ. ஏனையவை | 49,872,259.13 | 77,839,425.35 |
| **மொத்தம்** | **73,918,672.05** | **364,063,460.73** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| விபரம் | 2011 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| அ. தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் கொள்வனவு | 1,207,770.50 | 8,401,209.40 |
| ஆ. இயந்திரங்கள் கொள்வனவு | - | - |
| இ. கட்டடம் மற்றும் கட்டமைப்புச் செலவு | 5,260,250.04 | 16,021,520.16 |
| ஈ. ஏனையவை | 809,916.55 | 7,479,282.66 |
| **மொத்தம்** | **7,299,937.09** | **31,902,012.22** |

## 14. செயற் திட்டங்களின் விபரம் (உள்ளூர், வெளிநாட்டு நிதி) "

### அ. திருகோணமலை வளாகம்

| பெயர் விபரம் | கடன் / கொடை | நிதி வழங்குனர் # | TCE ரூபா | RF A ரூபா | DF ரூபா |
|---|---|---|---|---|---|
| திருகோணமலை வளாக ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைகள் புனர் நிர்மாணம் | கொடை | GOSL | 659,827.50 | - | - |
| வாகன தரிப்பிட நிர்மாணம் | கொடை | GOSL | 2,347,070.00 | - | - |
| திருகோணமலை வளாக சித்த மருத்துவப் பிரிவு கால்நடை தங்குமிட ஆராய்ச்சி ஆய்வுகூட கட்டுமானம் | கொடை | GOSL | 3,590,140.30 | - | - |
| LCS காட்சியறை மேம்படுத்தல் | கொடை | GOSL | 1,133,150.00 | - | - |
| இல 526 புனித அந்தோனியார் வீதி, செல்வநாயகபுரம், திருகோணமலை ஆண்கள் விடுதி பழுதுபார்த்தல் | கொடை | GOSL | 99,315.00 | - | - |
| வகுப்பறை கட்டிடம்-03 மேம்படுத்தல் | கொடை | GOSL | 863,615.00 | - | - |
| வகுப்பறை கட்டிடம்-02 மேம்படுத்தல் | கொடை | GOSL | 786,155.00 | - | - |
| வகுப்பறை கட்டிடம்-01 மேம்படுத்தல் | கொடை | GOSL | 1,059,285.00 | - | - |
| இல 315, டொக்கியாட் வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள ஆண்கள் விடுதியின் 05 கழிவறைகள் மற்றும் 05 குழியல் அறைகள் திருத்தம் | கொடை | GOSL | 1,453,043.40 | - | - |
| திருகோணமலை வளாக வணிக முகாமைத்துவ கற்கை அலுவலக மற்றும் விரிவுரை மண்டப மறுசீரமைப்பு | கொடை | GOSL | 2,368,395.00 | - | - |
| நிதி மற்றும் கணனிப் பிரிவிற்கான ஆமோனா கூரைத் தகரமிடல் மற்றும் வாசிகசாலை கட்டிட பகுதிச்சுவர் நிர்மாணித்தல் | கொடை | GOSL | 761,900.00 | - | - |
| வர்த்தக முகாமைத்துவ திணைக்களத்திற்கான விரிவுரை மண்டப நிர்மாணம் | கொடை | GOSL | 3,519,140.30 | - | - |
| ஆண்கள் விடுதி நிர்மாணம் | கொடை | GOSL | 100,000,000.00 | - | - |
| பெண்கள் விடுதி நிர்மாணம் | கொடை | GOSL | 100,000,000.00 | - | - |
| **மொத்தம்** | | | **218,641,036.50** | **-** | **-** |

# (GOSL / ADB / IDA / WB /……….)

## 15. செயற் திட்டங்களின் செலவு விபரம் (உள்ளூர்/வெளியூர் நிதி)

### அ. கி.ப.கழகம்

| பெயர் | TCE Rs. | 2011 இல் செலவு (ரூபா) | 2012 இல் செலவு (ரூபா) | 31.12.2012 இல் திரண்ட செலவு | பௌதீக முன்னேற்றம் % தில் |
|---|---|---|---|---|---|
| குடும்பங்களின் அடிப்படை ஆய்வு | 2,507,000.00 | 1,434,010.00 | 1,072,990.00 | 2,507,000.00 | 100 |
| ஊயிரியல் வேளாண்மை | 515,848.57 | 515,848.66 | | 515,848.66 | 100 |
| DTHR திட்டம் | 454,029.50 | - | 104,935.00 | 104,935.00 | 23 |
| DFC திட்டம் | 641,296.00 | - | 95,000.00 | 95,000.00 | 15 |
| தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டம் | 31,465.20 | - | 31,465.20 | 31,465.20 | 100 |
| GIS பயிற்சித் திட்டம் | 63,000.00 | - | 63,000.00 | 63,000.00 | 100 |
| WASH Endline ஆய்வுத்திட்டம் | 4,746,500.00 | - | 1,827,700.00 | 1,827,700.00 | 39 |
| புவியியல் மற்றும் நிர்வாக இடங்களின் தேர்வு பற்றிய ஆய்வு | 1,548,040.00 | - | 1,548,040.00 | 1,548,040.00 | 100 |
| இலங்கை DEEP திட்ட நிலம் O' அபிவிருத்தி | 1,259,500.00 | - | 1,259,500.00 | 1,259,500.00 | 100 |
| கிழக்கு மாகாணத்தில் கலாச்சார ரீதியான மீன் வளர்ப்பினை மேம்படுத்தல் | 2,223,900.00 | - | 2,223,900.00 | 2,223,900.00 | 100 |
| முரன்பட்ட சமாதானமும் அபிவிருத்தியும் | 308,052.50 | - | 308,052.50 | 308,052.50 | 100 |
| **மொத்தம்** | **14,298,631.77** | **1,949,858.66** | **8,534,582.70** | **10,484,441.36** | **79** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| பெயர் | TCE Rs. | 2011 இல் செலவு (ரூபா) | 2012 இல் செலவு (ரூபா) | 31.12.2012 இல் திரண்ட செலவு | பௌதீக முன்னேற்றம் % தில் |
|---|---|---|---|---|---|
| வாகனத் தரிப்பிடம் | 2,347,070.00 | 10,050,286.00 | 6,147,600.00 | - | - |
| திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகிற்கான கால்நடை தங்குமிட ஆராய்ச்சி ஆய்வுகூட நிர்மாணம் | 3,590,140.30 | - | 1,605,000.00 | - | - |
| நிதி மற்றும் கணனிப் பிரிவிற்கான ஆமோனா கூரைத் தகரமிடல் மற்றும் வாசிகசாலை கட்டிட பகுதிச்சுவர் நிர்மாணித்தல் | 761,900.00 | - | 1,605,000.00 | - | - |
| வர்த்தக முகாமைத்துவ கற்கைக்கான விரிவுரை மண்டப நிர்மாணம் | 3,519,140.30 | - | - | - | - |
| **மொத்தம்** | **10,218,250.60** | **10,050,286.00** | **9,357,600.00** | **-** | **-** |

## 16. நிதி நிலைமை விபரம் (செலவு)

### அ. கி.ப.கழகம்

| விபரம் | 2012இல் ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா) | 2012 இல் செலவுகள் (ரூபா) | சேமிப்பு/ மிகுதி (ரூபா) |
|---|---|---|---|
| அ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்கள | 426,811,000.00 | 427,086,658.50 | (275,658.50) |
| ஆ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மூலதன செலவீனங்கள் | 265,000,000.00 | 364,063,460.73 | (99,063,460.73) |
| இ. செயற் திட்டம் - உள்ளூர் நிதி | 14,298,631.77 | 8,534,582.70 | 5,764,049.07 |
| ஈ. செயற் திட்டம் - வெளிநாட்டு நிதி | - | - | |
| **மொத்தம்** | **706,109,631.77** | **799,684,701.93** | **(93,575,070.16)** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| விபரம் | 2012இல் ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா) | 2012 இல் செலவுகள் (ரூபா) | சேமிப்பு/ மிகுதி (ரூபா) |
|---|---|---|---|
| அ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்கள | 89,400,000.00 | 95,712,387.00 | (6,312,387.00) |
| ஆ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மூலதன செலவீனங்கள் | 36,400,000.00 | 31,902,012.00 | 4,497,988.00 |
| இ. செயற் திட்டம் - உள்ளூர் நிதி | 136,500,000.00 | 9,357,600.00 | 127,142,400.00 |
| ஈ. செயற் திட்டம் - வெளிநாட்டு நிதி | - | - | - |
| **மொத்தம்** | **262,300,000.00** | **136,971,999.00** | **125,328,001.00** |

## 17. நிதி நிலைமை விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்)

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| வருமான மூலங்கள் | 2012இல் ஒதுக்கம் (ரூபா) | 2012இல் திரட்டப்பட்டது (ரூபா) | பற்றாக்குறை/ மேலதிகம் (ரூபா) |
|---|---|---|---|
| பட்டப்படிப்புக் கற்கைகள் (வெளிவாரி) | 3,483,918.64 | 8,838,850.00 | 5,354,931.00 |
| பட்டமேற்படிப்புக் கற்கைகள் | 1,273,386.30 | 1,184,450.00 | (88,936.30) |
| ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | 1,334,583.20 | 685,900.00 | (648,683.20) |
| | **6,091,888.14** | **10,709,200.00** | **4,617,311.86** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| வருமான மூலங்கள் | 2012இல் ஒதுக்கம் (ரூபா) | 2012இல் திரட்டப்பட்டது (ரூபா) | பற்றாக்குறை/ மேலதிகம் (ரூபா) |
|---|---|---|---|
| பட்டப்படிப்புக் கற்கைகள் | 792,000.00 | 736,394.43 | (55,605.57) |
| பட்டமேற்படிப்புக் கற்கைகள் | - | - | - |
| ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | 114,000.00 | 101,394.43 | (12,605.57) |
| | **906,000.00** | **837,788.86** | **(68,211.14)** |

## 18. நிதி செயற்றிறன் ஆய்வு - 2012

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| தலைப்பு | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு (ரூபா) |
|---|---|---|
| மாணவர் ஒருவருக்கான மீண்டெழும் செலவு (மீ.செ) | மீ.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 154,238.59 |
| மாணவர் ஒருவருக்கான முதலீட்டுச் செலவு (மு.செ) | மு.செ /மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 131,478.32 |
| **மொத்தம்** | | **285,716.91** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| தலைப்பு | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு (ரூபா) |
|---|---|---|
| மாணவர் ஒருவருக்கான மீண்டெழும் செலவு (மீ.செ) | மீ.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 195,331.40 |
| மாணவர் ஒருவருக்கான முதலீட்டுச் செலவு (மு.செ) | மு.செ /மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 65,106.15 |
| **மொத்தம்** | | **260,437.55** |

## 19. ஏதேனும் பிற விடயங்கள்/இவ்வறிக்கை தொடர்பான செயற் திறன்

2012இல் நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டங்கள்

| தொடர் இல. | கூட்ட இலக்கம் | திகதி |
|---|---|---|
| 01 | 10 ஆவது | 09.03.2012 |
| 02 | 11 ஆவது | 12.05.2012 |
| 03 | 12 ஆவது | 30.06.2012 |
| 04 | 13 ஆவது | 25.07.2012 |
| 05 | 14 ஆவது | 28.08.2012 |
| 06 | 15 ஆவது | 24.09.2012 |
| 07 | 16 ஆவது | 22.10.2012 |
| 08 | 17 ஆவது | 28.11.2012 |
| 09 | 18 ஆவது | 30.12.2012 |

20. 2012ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காளர் தலைமையதிபதியின் அறிக்கை


විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT


මගේ අංකය
எனதுஇல
MyNo. ஈஎன்/பீரீ/பீ/ஈயூஎஸ் எல்/எவ்எஸ்/2012

ඔබේ අංකය
உமது இல
No.

දිනය
திகதி
Date 2013 யூன் 30

உபவேந்தர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்துடன், இலங்கையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மூலதன மாற்றங்களின் கூற்று, நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று என்பனவும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) மற்றும் 111 ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3),(4) மற்றும் (7) ஆம் உபபிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவு என்பவற்றின்படி இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற


අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone. 0112887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ மெயில் / E-mail. oaggov@sltnet.lk

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைகழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

---

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கிழக்குப் பல்கழைக்கழகத்தின், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பட்டதாரிமாணவர் கல்வியின் தொடர்பு மற்றும் தரத்தை முன்னேற்றும் (ஐஆர்கியூயூஈ) செயற்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் பல்கலைக்கழகத்திற்கு சொத்துக்களை செயற்திட்டம் கையளித்திருந்த போதிலும் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா 9,555,427 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி 102 | 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 17,860,815 தொகை நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371 | பல்வேறு நோக்கங்களிற்காகச் செலுத்தப்பட்டதும் 01 ஆண்டு தொடக்கம் 17 ஆண்டுகள் வரை வீச்செல்லை கொண்ட காலமாக பயன்படாதுள்ளதுமான ரூபா 14.61 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 756 | பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பௌதீக மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி 1646 | பல்கலைக்கழகத்தின் வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவனைகள் கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை

| | |
|---|---|
| (i) அத்தியாயம் X இன் பிரிவு 20.6 | உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் மாதாந்தம் படிவம் பொது 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு – 3.1 | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியினரின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பன வருகைப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 516,211,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் உள்ள ரூபா 84,147,590 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 437,448,075 அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 59,498,212 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம். ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 24,649,378 ஆல் மேலும், ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. தொழிற்பாட்டுச் செலவினம் ரூபா 96,267,379 ஆல் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான பங்களிப்பாக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1. செயலாற்றல்

(அ) நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகள்

தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டில் நடைபெற்ற பரீட்சைகளில் பட்டதாரி மாணவர்களின் செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| பீடம் | நடைபெற்ற பரீட்சைகளின் காலம் | பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை (முதலாண்டு தொடக்கம் இறுதி ஆண்டு வரை) | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை (இறுதி ஆண்டு) |
|---|---|---|---|
| விவசாயம் | 2012 மார்ச், ஏப்ரல் ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 175 | 27 |
| கலை | 2012 மார்ச், ஏப்ரல், யூன், யூலை, ஒக்தோபர் மற்றும் நொவம்பர் | 1220 | 333 |
| வர்த்தகமும் முகாமைத்துவமும் | 2012 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, யூன், யூலை, செப்தெம்பர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 716 | 91 |
| விஞ்ஞானம் | 2012 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 422 | 48 |
| சுகாதார பராமரிப்பு விஞ்ஞானம் | 2012 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 238 | 27 |
| | மொத்தம் | 2,771 | 526 |

(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்

---

மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 482,847,281 தொகையாகும். ஆண்டிற்கான ஒரு மாணவருக்கான சராசரி மீண்டுவரும் கிரயம் ரூபா 174,376 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 43,705 ஆல் அதிகரித்திருந்தது.

(இ) மகாபொல மற்றும் உதவிப்பணம்

---

மீளாய்வாண்டில் 5503 மாணவர்களிற்கு மாஹாபொலவாக ரூபா 11,833,100 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 8301 மாணவர்களிற்கு உதவிப் பணங்களாக ரூபா 16,598,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நூலக முகாமைத்துவம்

---

நூலகத்திலிருந்து நூல்களை எடுத்திருந்த கல்விசார் பதவியினர் மற்றும் மாணவர்களால் குறித்த காலத்திற்கிடையில் 409 புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக அந்தப் புத்தகங்களை திரும்பப் பெறுவதற்காக முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைப் பரிசில்கள் பெற்று வெளிநாடுகளிற்கு சென்ற பல்கலைக்கழகத்தின் 57 விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்களைப் பூர்த்தி செய்த பின்னர் கடமைக்கு திரும்பியிருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு விலகிச் சென்றிருந்தனர். எனினும், பல்கலைக்கழகம் உடன்படிக்கைகளை மீறியமைக்காக அந்த 57 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 70,407,561 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கல்விசார் பதவியணியிலிருந்த 52 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2012 திசெம்பர் 31 வரை பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை

ஆகையால், அது பிரதானமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதித்திருந்தன.

(இ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 29(டி) மற்றும் 29(ஈ) பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தால் பட்டபின் படிப்பு பாடநெறிக்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (யூஜீசி) அங்கீகாரம் 2012 திசெம்பர் 31 வரை கூட பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 22 பட்டபின்படிப்பு பாடநெறிகள் யூஜீசி இன் அங்கீகாரம் இல்லாமல் நடாத்தப்பட்டிருந்தது.

(ஈ) 54 நபர்களிற்கு ரூபா 1.18 மில்லியன் தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்துடன் நபர்களை இனங்கண்டு முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 05 ஆண்டுகள் தொடக்கம் 17 ஆண்டுகள் வரை வீச்செல்லை கொண்டகாலமாக இந்த முற்பணங்கள் தீர்க்கப்படாதிருந்தன.

## 4.3. செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு

சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் (எவ்எச்சிஎஸ்) பயன்பாட்டிற்காக இந்தியாவிலுள்ள ஒரு தனியார் கம்பனியிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 13.4 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்தக் கொள்னவிற்காக மூன்று கேள்விதாரர்கள் தமது கேள்விகளைச் சமர்ப்பித்திருந்தனர். இந்த 3 கேள்விகளில், இரண்டு கேள்விகள் மோசடியானவையானதுடன் ஒரு கேள்வி ஆடை தயாரிப்பு உபபாகங்கள் வழங்குனரிடமிருந்தானதாகும்.

(ii) இரண்டு கேள்விதாரர்கள் அவர்களின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் முகவரிகளில் இனங்காணப்பட்டனர்.

(iii) “எட்டு ரிஸ்யூ செயன்முறை உபபாகங்கள்” என்றழைக்கப்படும் இந்த மருத்துவ உபகரணம் ரூபா 4.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் ரிஸ்யூ செயன்முறையின் பிரதான பகுதி இன்மையால் கொள்வனவுத் திகதியிலிருந்து பயன்பாடின்றியிருந்தது.

(iv) இந்த உபகரணத்திற்காக உள்நாட்டு வழங்குனர்களைக் கருத்திற்கொள்ளாது மூன்று கூறு விலைகளும் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டிருந்தன.

(v) தரப்பட்ட தகவல்களின் படி, உபகரணங்களிற்காக செலுத்தப்பட்ட விலைகள் சர்வதேச சந்தையில் நிலவிய சந்தை விலைகளிலும் பார்க்க உயர்வானதாக இருந்தன. சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

| விடயத்தின் பெயர் | சந்தை விலை (ஐ.அ.டொலர்) | கொள்வனவு செய்த விலை (ஐ.அ.டொலர்) |
|---|---|---|
| பிரேத அறை குளீரூட்டி (பிரேத அறை பீடங்கள்) | 1,320 – 7,900 (வீச்சில்) | 26,000 |
| அவற்றாசவுன்ட் ஸ்கானர் | 8,000 – 15,000 | 36,324 |
| பைனாகுலர் மைக்குறோஸ்கோப் | 2,123 – 4,425 | 9,015 |

(ஆ) **நூலக தானியங்கி முகாமைத்துவ மென்பொருள் (லிப்சீஸ்) ஐ.அ.டொலர் 27,400 (ரூபா 3.2 மில்லியன்) இல் கொள்வனவு**

2008 ஆம் ஆண்டில் இந்தியா, ஹரியானாவிலுள்ள வ/ப எம்எஸ் லிப்சிஸ் ரெக்னொலொஜீஸ் பீவீரீ, இலிருந்து லிப்சிஸ் மென்பொருள் முறைமை ரூபா 3.2 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்தக் கொள்வனவுவிற்கு தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு (ரீஈசீ) சிபார்சு செய்திருக்கவில்லை.

(ii) கொள்வனவுக் குழுவின் (பீசீ) அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) பல்கலைக்கழகம் வழங்குனருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(iv) பல்கலைக்கழகம் வழங்குனரிடமிருந்து செயலாற்றல் பிணை முறியை பெற்றிருக்கவில்லை.

(v) ஒப்பந்தத்தின் கடிதத்தின் படி, வழங்குனர் "லீனக்ஸ்" முறைமையை வழங்கியிருக்க வேண்டும். எனினும் வழங்குனர் 2009 ஏப்ரல் 27 இல் வின்டோஸ் முறைமையை வழங்கி நிறுவியிருந்தார்.

(vi) தரவு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மாதிரி, அறிக்கை உருவாக்கல் மாதிரி, மற்றும் தரவு பின்னறக்க மாதிரி என்றவாறான முறைமைப் பாகங்களின்மையால் "லிப்சிஸ்" முறைமை அதன் முழு இயலளவில் செயற்படுத்தப்படவில்லை என்று பௌதீக பரிசோதனையில் வெளிப்பட்டது.

(vii) வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய ஐ.அ.டொலர் 10,960 (மொத்த கிரயத்தின் 40%) கொடுப்பனவு செய்யாதமையால் நிறுவிய பின்னர் 3 ஆண்டுகளாக ஆண்டு ஆதரவுச் சேவையை வழங்குனர் மேற்கொண்டிருக்கவில்லை.

(viii) இந்த முறைமை, 2008 ஆம் ஆண்டில் ரூபா 3.2 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த முறைமை நூலகத்தில் 2009 ஏப்ரல் 27 இலேயே நிறுவப்பட்டிருந்தது.

**(இ)** சுகாதார பராமரிப்பு பீடத்தில் தாதியார் நிகழ்ச்சித்திட்டத்தில் பீஎஸ்சி பட்டத்திற்கு வசதியளிப்பதற்காக நோர்வேயின் ரீஆர்ஓஎம்எஸ்ஓ பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 17,372,951 தொகை நிதி கிடைத்திருந்த போதிலும் இது தொடர்பில் முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த

செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பல்கலைக்கழகத்தின் சபை மற்றும் செனற்றின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்ட செலவினம் மற்றும் உண்மையான செலவினத்திற்கு இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

### 5.2 கணக்காய்வுக் குழு

மீளாய்வாண்டில் 09 கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. குழு பல கூட்டங்களிலும் கணக்காய்வு ஐய வினாக்களிற்குப் பதிலளிக்கும்படி சிபார்சு செய்திருந்தது. எனினும், மீளாய்வாண்டில் கணககாய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட 06 ஐய வினாக்களிற்குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) முற்பணங்களின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்
(ஈ) கொள்வனவுகள்

ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

S/y

21. **இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2012 திசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2)ஆம் பிரிவு மற்றும் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு**

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்களும் ஆளும் அதிகாரசபையின் முகாமைத்துவ அவதானிப்புகளும் | அவதனிப்புக்கள் |
|---|---|---|
| **2.2** நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள் | | |
| **2:2:1 கணக்கீட்டுக் குறைபாடுகள்:** | | |
| a. | பட்டதாரி மாணவர் கல்வியின் தொடர்பு மற்றும் தரத்தை முன்னேற்றும் (ஐஆர்கியூயூஈ) செயற்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் பல்கலைக்கழகத்திற்கு சொத்துக்களை செயற்றிட்டம் கையளித்திருந்த போதிலும் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் 15.09.2010ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் ஐஆர்கியூயூஈ செயற்றிட்டத்தின் கீழ் பெற்றுள்ள சொத்துக்கள் யாவும் கி.ப.கழக ஐஆர்கியூயூஈ திட்ட எல்டிஎஸ் அலுவலகத்தினால் பொருத்தமான துறைகளுக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளன.<br><br>மேலும் நிதியறிக்கையில் சொத்துக்களை முதலாக்கம் தொடர்பாக, ஐஆர்கியூயூஈ திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பேரேட்டில் காணப்படும் சொத்துக்களின் பெறுமதியானது இறுதிக்கணக்கில் விலை மதிப்பாகவா அல்லது தேய்மானத் தொகை மதிப்பாகவா கொள்வதென கடிதத்தில் தெளிவாக குறிப்பிடப்படப்பட்டிருக்கவில்லை |
| b. | 2006 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா 9,555,427 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் கணக்குகளிற்குக் கொண்டுவரப்-பட்டிருக்கவில்லை. | கணக்காளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகமானது தனியார் சேவை வழங்குனர் மூலம் நிலையான சொத்துப் பதிவேட்டினை முடிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பணி நிறைவுற்றதும் இறுதிக்கணக்குடன் இணைக்கப்படும். |
| **2:2:3** சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | | |
| அ. நிதிப்பிரமாணங்கள் | | |
| | I. நி.பி 102<br>1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 17,860,815 தொகை நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்கெனவே சகல ஆவணங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தள்ளுபடி செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. |
| | II. நி.பி. 371<br>பல்வேறு நோக்கங்களுக்காகச் செலுத்தப்பட்டதும் 01 ஆண்டு தொடக்கம் | **01. உள்ளக ஊழியர்களினால் பெறப்பட்ட முற்பணங்கள்** |

| | | |
|---|---|---|
| | 17 ஆண்டுகள் வரை வீச்செல்லை கொண்ட காலமாக பயன்படாதுள்ளதுமான ரூபா 14.61 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | செலுத்தத் தவறியவர்களிடமிருந்து முற்பணத்தை அவர்களது சம்பளத்திலிருந்து அல்லது பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>**02. வழங்குநர்களுக்கான முற்பணம்**<br>இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழுவினரின் பரிந்துரைகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். |
| | III. நி.பி. 756<br>பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான பௌதீக மெய்மை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2012ஆம் ஆண்டிற்கான பௌதீக மெய்மையாய்வு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |
| | IV. நி.பி. 1646<br>பல்கலைக்கழகத்தின் வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க-வில்லை. | வாகன தினப்பதிவேடுகள் தற்போது புதுப்பிக்கப்பட்டு பொதுக் கணக்காய்வு அலுவலகத்தில் ஒழுங்காக கையளிக்கப்படுகிறது. |
| b. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை<br><br>i. அத்தியாயம் X இன் பிரிவு 20: உத்தியோகத்தர்களினால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் மாதாந்தப் படிவம் பொது 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை<br><br>ii. அத்தியாயம் XXVII இன் பிரிவு 3.1: பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியினரின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பன வருகைப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்க வில்லை. | i. நாம் இதற்கு உடன்படுகிறோம், எதிர்காலத்தில் சம்பளமற்ற விடுமுறை பெற்றவர்கள் தொடர்பான விபரங்களை கணக்காளர் தலைமையதிபதி அவர்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>ii. வழமையாக கல்விசார் ஊழியர்கள் தங்கள் வரவுகளை பதிவதில்லை. எவ்வாறாயினும், வரவு தொடர்பான விபரங்கள் பீடங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. |
| **3. நிதிசார் மீளாய்வு** | | |
| **3.1 நிதிசார் விளைவுகள்** | | |
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 516,211,000 ஆன அரசாங்க | | குறிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் உள்ள ரூபா 84,147,590ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 437,448,075 அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 59,498,212ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம். ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 24,649,378ஆல் மேலும், ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. தொழிற்பாட்டுச் செலவீனம் ரூபா 96,267,379 ஆல் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான பங்களிப்பாக இருந்தது. | | |
| **4. செயற்பாட்டு மீளாய்வு** | | |
| **4.1 செயலாற்றல்** | | |
| அ. | நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகள் | தங்களது இக்கூற்று தொடர்பில் நாம் உடன்படவில்லை.<br><br>குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கு அமர்ந்த மொத்த மாணவர்களில் முதலாம் வருடம் முதல் நான்காம் வருடம் வரையிலானவர்களும் மற்றும் பரீட்சையில் சித்தியடைந்தோரில் இறுதி வருட மாணவர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. |
| ஆ. | ஒரு மாணவருக்கான கிரயம் | ஊழியர்களின் தனிநபர் வருமானம் மற்றும் மூலதன மற்றும் ஒப்பந்த சேவைகள் என்பவற்றிக்கான ஒதுக்கீடு அதிகரிப்பினால் ஒரு மாணவனுக்கான செலவு அதிகரித்திருந்தது. |
| இ. | மகாபொல மற்றும் உதவிப்பணம் | குறிக்கப்பட்டது |
| ஈ. | நூலக முகாமைத்துவம்<br><br>நூலகத்திலிருந்து நூல்களை எடுத்திருந்த கல்விசார் பதவியினர் மற்றும் மாணவர்களால் குறித்த காலத்துக்கிடையில் 409 புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக அந்தப் புத்தகங்களை திரும்பப் பெறுவதற்காக முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்களை இரவல் பெற்ற சகலருக்கும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன மற்றும் புத்தகங்களின் பெறுமதியை அறவிடுவதற்கு நூலக குழுவின்மூலம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| **4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்** | | |
| அ. | புலமைப் பரிசில்கள் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்ற பல்கலைக்கழகத்தின் 57 விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்களைப் பூர்த்தி செய்த பின்னர் கடமைக்கு திரும்பியிருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு விலகிச் சென்றிருந்தனர். எனினும், பல்கலைக்கழகம் உடன்படிக்கைகளை மீறியமைக்காக அந்த 57 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா | • 12 வழக்குகள் உட்பட 72 எண்ணிக்கையான கடப்பாடு ஒப்பந்தத்தை மீறியோரது வழக்குகள் வழக்கறிஞர் நாயக அலுவலகத்திடம் சட்ட நடவடிக்கை-களுக்காகவும் அவர்களிடமிருந்து பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்காகவும் கையளிக்கப்பட்டுள்ளன. இரண்டு வழக்கறிஞர்கள் இவற்றைக் |

| | | |
|---|---|---|
| | 70,407,561 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கையாள்கின்றனர். சரியாக ரூபா 7.8 மில்லியன் தற்போது வரை மீளப் பெறப்பட்டுள்ளது.<br><br>• சிரேஷ்ட முகாமைத்துவ குழுவானது அதன் 19ஆவது, 20ஆவது குழுக்கூட்டத்தில் கடப்பாட்டு ஒப்பந்தத்தை மீறியோரது தற்போதைய இருப்பிடங்களை அறிந்து கொள்வதற்காக இலங்கையிலுள்ள அந்தந்த வெளிநாட்டுத் தூதரகங்களின் உதவியைப் பெறுவதற்கு அனுமதியளித்துள்ளது.<br>• அண்மையில் சட்டமா அதிபர் திணைக்களம் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை என தெரிவித்திருந்தது. எனினும் 24.10.2012இல் நடைபெற்ற 15ஆவது கணக்காய்வுக் கூட்டத்தில், தலைவர் ப.க.ஆ.குழு/செயலாளர், உ.க.அமைச்சு என்பவற்றுக் கூடாக சட்டமா அதிபருக்கு 10 வருடங்களுக்கு மேற்பட்ட வழக்குகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான சிபார்சினை வழங்கியது. |
| ஆ. | கல்விசார் பதவியணியிலிருந்த 52 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2012 திசம்பர் 31 வரை பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை ஆகையால், அது பிரதானமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதித்திருந்தன. | அனேகமான நியமனங்கள் தற்போது நிரப்பப்பட்டுவிட்டன, சில பேராசிரியர்களுக்கான நியமனங்கள் பொருத்தமானவர்கள் இன்மையால் நிரப்பப்படவில்லை. |
| இ. | 1978 இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 29(டி) மற்றும் 29(ஈ) பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழத்தால் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (யூஜீசி) அங்கிகாரம் 2012 திசம்பர் 31 வரை கூட பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 22 பட்டபின்படிப்பு பாடநெறிகள் யூஜீசி இன் அங்கீகாரம் இல்லாமல் நடாதத்தப்பட்டிருந்தது. | இதற்கு நாம் உடன்படுகிறோம். இதனைச் சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து முறையான அனுமதியும் பெறப்படும் |
| ஈ. | 54 நபர்களிற்கு ரூபா 1.18 மில்லியன் தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் நபர்களை இனங்கண்டு முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 05 ஆண்டுகள் | அறியப்படாத முற்பணங்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | தொடக்கம் 17 ஆண்டுகள் வரை வீச்செல்லை கொண்ட காலமாக இந்த முற்பணங்கள் நீர்க்கப்படாதிருந்தன. | |
| **4.3 செயற்பாட்டு மீளாய்வு** | | |
| அ. | மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு | பேரவையினால் நிறுவப்பட்ட விசாரணைக் குழுவானது தமது அறிக்கையை பேரவைக்கு சமர்ப்பித்துள்ளது. இவர்களின் பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| ஆ. | நூலக தானியங்கி முகாமைத்துவ மென்பொருள் (லிப்சீஸ்) ஐ.அ.டொலர் 27,400 (ரூபா 3.2 மில்லியன்) இல் கொள்வனவு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான நிலையியல் குழுவின் சிபார்சின் அடிப்படையில் "Libsys" மென்பொருளானது கொள்வனவு செய்யப்பட்டது. முறையான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். எனினும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு குறைபாடுகள் நிவர்த்திப்பதற்காக மிகுதி கொடுப்பனவை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| இ. | சுகாதார பராமரிப்பு பீடத்தில் தாதியர் நிகழ்ச்சித்திட்டத்தில் பீஎஸ்சி பட்டத்திற்கு வசதியளிப்பதற்காக நோர்வேயின் ரொம்சோ பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 17,372,951 தொகை நிதி கிடைத்திருந்த போதிலும் இது தொடர்பில் முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்கு பல்கலைக்கழகத்தின் மூதவை மற்றும் பேரவை என்பவற்றின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. | 24.09.2012இல் நடைபெற்ற 15ஆவது கணக்காய்வுக்குழு கூட்டத்தில், திட்டமானது ஏற்கெனவே முடிவடைந்துள்ளதால் திட்ட நிர்வாகத்தினால் தவறான முறையில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளை சீர்செய்ய முடியாதென்ற கருத்தினை குழுவானது தெரிவித்திருந்தது. எனவே குறைந்தபட்சம் திட்ட நிதிக்கு என்ன நிகழ்ந்தது என்பதை அறிய விசாரணையைத் தொடர்ந்து முன்னெடுக்கும்படி கணக்காய்வுக்குழு ஆலோசனை வழங்கியது.<br><br>கணக்காய்வுக் குழுவினால் தனிநபர் விசாரணைக் குழுவொன்று சிபார்சு செய்யப்பட்டு அதன் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது. |
| **5. கணக்களித்தன்மை மற்றும் நல்லாட்சி** | | |
| **5.1. பாதீட்டுக் கட்டுப்பாடு** | | |
| | பாதீடிடப்பட்ட செலவினம் மற்றும் உண்மையான செலவினத்திற்கு இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. | கணக்காளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03.\.2011ஆம் இலக்க, 14.02.2011 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் கல்விசார் ஊழியர்களின் உதவுத்தொகையின் அதிகரிப்பே பாரிய வேறுபாட்டுக்கான காரணமாக இருந்தது. |

| 5.2 கணக்காய்வுக் குழு | | |
|---|---|---|
| | மீளாய்வாண்டில் 09 கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. குழு பல கூட்டங்களிலும் கணக்காய்வு ஐய வினாக்களிற்குப் பதிலளிக்கும்படி சிபார்சு செய்திருந்தது. எனினும், மீளாய்வாண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட 06 ஐய வினாக்களிற்குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் நாம் பதிலளிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். |
| **6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்** | | |
| | கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கடப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கடப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது:<br><br>(அ) கணக்கீடு<br>(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்<br>(இ) முற்பணங்களின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்<br>(ஈ) கொள்வனவுகள் | குறிக்கப்பட்டது. |

**ஒப்பம்:-** **கலாநிதி கே. கோபிந்தராஜா**
உபவேந்தர்